PRIMARY SCHOOL


SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 5 - 2013

PAPER 1 – COMPOSITION

***வினா 2***

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 90 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| ஓவியப்பாடம் | பள்ளிச்சீருடையின் |
| தலைமையாசிரியர் | கைகலப்பு |
| அழைப்பதாக | கத்தரிக்கோல்களால் |
| குறும்புக்கார மாணவன் | இரத்தம் வழிந்தது |


P5 SA2

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2, 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு.

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

***Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12மதிப்பெண்கள்)***

வழிப்போக்கன் ஒருவன் நெடுந்தூரப் பயணம் மேற்கொண்டான். (Q1) ______________ அவன் கண்ணெதிரே ஒரு மரம் தென்பட்டது. அது (Q2) ______________ எல்லாம் கொடுக்கும் சக்தி வாய்ந்த மரம் என்பது அவனுக்குத் தெரியாது. " இங்கு ஒரு கட்டில் மட்டும் இருந்தால் எவ்வளவு சுகமாகப் படுத்து உறங்கலாம் " என நினைத்துக்கொண்டான். திடீரென்று (Q3) ______________ எதிரே ஒரு பட்டு மஞ்சம் தோன்றியது. அதை (Q4) ______________ அவன் திகைத்துப் போனான். அச்சமயத்தில் பசி (Q5) ______________ கிள்ளிற்று. " இப்போது அறுசுவை உணவு கிடைத்தால் எப்படி இருக்கும் ? " என கற்பனை செய்து பார்த்தான். உடனே அவன் முன் பல்வகை உணவு தோன்றியது. அவன் (Q6) ___________ மேல் விரல் வைத்து அதிசயித்தான். பின்னர், உணவை வயிறு புடைக்க உண்டான்.

Q1
1) அத்தருணத்தின்
2) அத்தருணத்தில் ( )
3) அத்தருணத்தை
4) அத்தருணத்திலிருந்து

Q2
1) கேட்பதற்கு
2) கேட்பதால்
3) கேட்பதை ( )
4) கேட்பதில்

Q3
1) வழிப்போக்கனிடம்
2) வழிப்போக்கனுடைய ( )
3) வழிப்போக்கனுக்கு
4) வழிப்போக்கனால்

Q4
1) கண்டதில்
2) கண்டவுடன் ( )
3) கண்டதால்
4) கண்டதை

Q5
1) வயிற்றை
2) வயிற்றில் ( )
3) வயிற்றின்
4) வயிற்றுக்கு

Q6
1) மூக்கில்
2) மூக்கின் ( )
3) மூக்கால்
4) மூக்கிலிருந்து

A2 செய்யுள் / பழமொழி

***Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)***

Q7 உப்பிட்டவரை உள்ளளவும் ________________

1) மறக்காதே
2) நினை
3) பாராட்டு
4) போற்று

( )

Q8 மகன்தந்தைக்கு ________________ உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல்

1) புரியும்
2) செய்யும்
3) ஆற்றும்
4) எடுக்கும்

( )

Q9 ________________ விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்

1) சுடர்விடும்
2) எரிகிற
3) பிரகாசிக்கும்
4) அணையா

( )

Q10 கற்க கசடறக் கற்பவை கற்றபின்
________________ அதற்குத் தக

1) ஏற்க
2) பெருக்க
3) நிற்க
4) கற்பிக்க

( )

Q11 இளமையில் கல்வி ________________ எழுத்து

1) சிலையில்
2) சித்திரத்தில்
3) உள்ளத்தில்
4) புத்தகத்தில்

( )

Q12 செயற்கரிய செய்வார் பெரியர் ________________
செயற்கரிய செய்கலா தார்

1) சிறார்
2) இளையர்
3) ஆடவர்
4) சிறியர்

( )

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றி படி.

ரகுவரனும் அரவிந்தனும் அண்டை வீட்டுக்காரர்கள்.அவர்களின் இல்லத்திற்கு இடையே ஒரு பெரிய மாமரம் பூத்துக் காய்த்துக்கொண்டிருந்தது. மாமரத்திலிருந்து கிடைக்கும் கனிகளை இருவருமே *<u>பயன்படுத்தி</u>*க்கொண்டிருந்தனர். ஒருசமயம் மரத்திலிருந்த அத்தனை மாங்கனிகளும் திருட்டுப் போய்விட்டன. மாங்கனிகளைத் திருடியவன் அவசரத்தில் ரகுவரனின் வீட்டுப் பக்கத்தில் ஐந்நூறு மாங்கனிகளை விட்டுச் சென்று விட்டான். விடிந்ததும் மரத்தைப் பார்த்த இருவருமே திடுக்கிட்டனர். ரகுவரனின் வீட்டுப் புல் தரையில் மாங்கனிகளைப் பார்த்த அரவிந்தன், ரகுவரன்தான் இரவோடு இரவாக மாங்கனிகளைக் களவாடியிருக்கிறான் என்றெண்ணி சண்டை போட ஆரம்பித்தான்.

மறுநாளே இரு வீடுகளுக்கிடையே முள்வேலி அமைத்துக்கொண்டனர். ரகுவரன் வீட்டுப்பக்கம் இருக்கும் கிளைகளிலிருந்து கிடைக்கும் மாம்பழங்கள் அவனுக்குச் சொந்தம் என்றும், அதேபோன்று அரவிந்தன் வீட்டுப்பக்கம் இருக்கும் கிளைகளிலிருந்து கிடைக்கும் மாங்கனிகள் இவனுக்குச் சொந்தம் என்றும் முடிவெடுக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு வாசல் பக்கம் வந்த ரகுவரனின் பார்வை அவனை அறியாமலேயே மாமரத்தின் மீது விழுந்தது. சில வினாடிகள் *<u>உற்று</u>* நோக்கினான். தன் வீட்டுப் பக்கத்தில் காய்த்திருக்கும் மாங்கனிகளை விட அரவிந்தன் வீட்டுப்பக்கம் மாங்கனிகள் அதிகமாக காய்த்திருப்பதைப் பார்த்ததும் மனத்தில் பொறாமை ஏற்பட்டது.

மறுநாள் இரவே யாருக்கும் தெரியாமல் ஓர் ஆளை வைத்து அரவிந்தன் வீட்டுப்பக்கம் காய்த்திருக்கும் மாங்கனிகளைப் பறித்து பக்கத்து ஊரில் உள்ள சந்தையில் விற்க ஏற்பாடு செய்துவிட்டான்.உண்மையை அறிந்த அரவிந்தனுக்கு ஆத்திரம் பொங்கியது. ரகுவரனை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என எண்ணிக்கொண்டிருந்தான். ஒரு சமயம் ரகுவரன் வெளியூருக்குப் பயணம் மேற்கொண்டதை அறிந்ததும் அரவிந்தன் ரகுவரனின் வீட்டுப் பக்கத்தில் காய்த்திருக்கும் மாங்கனிகளைப் பறித்து விற்றுவிட்டான். வெளியூரிலிருந்து திரும்பிய ரகுவரன் நடந்ததை அறிந்து திடுக்கிட்டான்.

இருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் அந்த மாமரத்தை வெட்டிச் சாய்க்க சென்ற போது “ நில்லுங்கள் ” என்ற குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.அங்கே துறவி ஒருவர் நின்றுகொண்டிருந்தார். “ நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு மரத்தை வெட்டுங்கள்” என்றார் அவர். “ இந்த மாமரம் உயர்ந்ததா அல்லது மனிதன் உயர்ந்தவனா ?” என்று இருவரையும் பார்த்துக் கேட்டார். “ சந்தேகம் என்ன மனிதன்தான் உயர்ந்தவன் ” என ரகுவரன் பதிலளித்தான். “ எப்படி ” என துறவி விளக்கம் கேட்டார். “ மனிதனுக்கு ஆறறிவு இருக்கிறது ” என மீண்டும் பதிலளித்தான் ரகுவரன். “ அப்படியா! இந்த மாமரம் மறைமுகமாக என்னிடம் என்ன சொல்கிறது தெரியுமா ? மனிதனைவிட நான்தான் உயர்ந்தவன் என்கிறது” என்றார் துறவி.

“ எப்படி? ” என்று விளக்கம் கேட்டான் அரவிந்தன். அதற்குத் துறவி “ என்னைக் கல்லால் அடித்தவனுக்கும்கூட வலியைப் பொறுத்துக்கொண்டு, சுவையுள்ள பழத்தைத் தருகிறேன்.இந்த இரண்டு மனிதர்களுக்கும் நான் நிறைய கனிகள் கொடுத்து வருகிறேன்.இவர்களுக்கு நன்மையைச் செய்துகொண்டிருக்கும் என்னை ஏன் வெட்ட வருகிறார்கள் என்று மரம் கேட்கிறது. நீங்கள் வெட்டக்கூடிய அளவுக்கு இந்த மரம் செய்த கொடுமை என்ன ? பதில் சொல்லுங்கள் ” என்றார் துறவி. துறவி சொன்னதைக் கேட்ட இருவரும் தலை குனிந்தனர்.தங்கள் தவறு புரிந்தது.பொறாமை என்னும் இருள் *<u>விலக</u>*

ஆரம்பித்தது. அவர்கள் இனி சண்டை போடாமல் மரத்தில் காய்க்கும் மாங்கனிகளைச் சமமாகப் பகிர்ந்துகொள்வதென முடிவெடுத்தனர்.

***Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. <u>ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தேர்ந்தெடு.</u> அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)***

Q13 திருடனின் எச்செயல் இருவருக்கும் இடையே பிணக்கத்தை ஏற்படுத்தியது ?

(1) மாமரத்தில் உள்ள மாம்பழங்களைத் திருடியதால்
(2) ரகுவரன் மீது பழி சுமத்தியதால்
(3) தவறுதலாக மாங்கனிகளை விட்டுச் சென்றதால்
(4) இரவு வேளையில் வீட்டிற்குள் நுழைந்ததால்

( )

Q14 இருவருக்கும் இடையே பகை உண்டானது என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ளலாம் ?

(1) இருவரும் மாங்கனிகளைப் பகிர்ந்துகொள்ள தீர்மானித்தபோது
(2) அவர்களின் இல்லங்களுக்கு இடையே முள்வேலி அமைத்துக்கொண்ட போது
(3) இருவரும் சண்டையைத் தவிர்த்த போது
(4) அரவிந்தன் ரகுவரனின் வீட்டில் மாங்கனிகளைக் கண்ட போது

( )

Q15 ரகுவரன் ஏன் அரவிந்தனுக்குச் சொந்தமான மாம்பழங்களைத் திருட முடிவெடுத்தான் ?

(1) அரவிந்தனின் வீட்டுப்பக்கத்தில் அதிகளவில் மாம்பழங்கள் காய்த்திருந்ததால்
(2) அரவிந்தனின் வீட்டுப்பக்கத்தில் உள்ள மாமரத்தை உற்று நோக்கியதால்
(3) அரவிந்தன் மீது பொறாமை ஏற்படாததால்
(4) அரவிந்தனை விட தனது வீட்டுப்பக்கத்தில் அதிகமான மாங்கனிகள் காய்த்திருப்பதால்

( )

Q16 மரம் ஏன் மனிதனை விட உயர்ந்ததாகக் கருதப்படுகிறது ?

(1) மனிதனைக் காட்டிலும் அதற்கு ஆறறிவு உள்ளதால்
(2) தன்னைத் துன்புறுத்துபவர்களுக்குக்கூட அது நன்மை அளிப்பதால்
(3) அது தனக்குத் தீங்கு இழைப்பவர்களைப் பழி வாங்குவதால்
(4) அது தனக்கு நன்மை புரிபவர்களுக்கு உதவுவதால்

( )

Q17 அரவிந்தனும் ரகுவரனும் எப்போது மனம் திருந்தினர் ?

(1) அவர்கள் பொறுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்தபோது
(2) அவர்கள் தங்களது கோபத்தை அடக்கிக்கொள்ள இயன்றபோது
(3) அவர்கள் உள்ளத்தில் இருந்த பொறாமை அகன்றபோது
(4) அவர்கள் துறவியின் போதனைகளைக் கேட்டபோது

( )

B4 சொற்பொருள்

***Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)***

Q18 பயன்படுத்தி

(1) பகிர்ந்து
(2) உபயோகித்து
(3) உட்கொண்டு
(4) அகற்றி

( )

Q19 உற்று

(1) கூர்ந்து
(2) கவனித்து
(3) பார்த்து
(4) முறைத்து

( )

Q20 விலக

(1) எரிய
(2) மறைக்க
(3) நீங்க
(4) தெரிய

( )

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி

# ஓவியக் கண்காட்சி

2013

**1-5 செப்டம்பர்**

திறந்திருக்கும் நேரம் தினசரி காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை

இந்த ஓவியக் கண்காட்சியில் ஐம்பதற்கும் மேற்பட்ட படைப்புகள் இடம்பெறுகின்றன. ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புகழ்பெற்ற ஓவியர்களின் சித்திரங்கள் உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கவிருக்கின்றன.

பிரபல ஓவியர்களை நேரில் கண்டு அவர்களோடு கலந்துரையாட வாய்ப்பளிக்கப்படும்.

*நுழைவுக்கட்டணம்*

வாரநாட்கள் - $8 பெரியவர்/ $5 சிறுவர்
சனி/ஞாயிறு - $10 பெரியவர்/ $ 8 சிறுவர்
*ஏழு வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு அனுமதி இலவசம்.

கண்காட்சியைக் காண வரும் முதல் பத்து பேருக்கு ஒரு சிறப்புப் பரிசு காத்திருக்கிறது.

மேல் விவரங்களுக்கு
63485555
என்ற எண்ணுடன்
தொடர்பு கொள்ளவும்

முன்பதிவு செய்ய விரும்புவோர் www.oviyam.com என்ற இணையப்பக்கத்திற்குச் செல்லலாம்

**Q21** *முதல்* **Q23** *வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர்,* **OAS** *விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*
***(6 மதிப்பெண்கள்)***

Q21. எத்தகைய ஓவியங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற உள்ளன?

(1) ஐம்பதற்கும் மேற்பட்ட ஓவியங்கள்
(2) ஆசிய நாட்டு ஓவியங்கள் மட்டும்
(3) உலகப் புகழ்பெற்ற சித்திரங்கள்
(4) ஐரோப்பிய மற்றும் ஆசிய நாட்டு சித்திரங்கள் ( )

Q22. ஏழு வயதிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் வெள்ளிக்கிழமை அன்று கண்காட்சியைக் காண விரும்பினால் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் ?

(1) எட்டு வெள்ளி செலுத்த வேண்டும்
(2) ஐந்து வெள்ளி செலுத்த வேண்டும்
(3) கட்டணம் செலுத்த தேவையில்லை ( )
(4) பத்து வெள்ளி செலுத்த வேண்டும்

Q23. மே மாதத்திலேயே ஒருவர் நுழைவுச்சீட்டை வாங்க விரும்பினால் என்ன செய்ய வேண்டும் ?

(1) தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள வேண்டும்
(2) பத்து வெள்ளி கட்டணம் செலுத்த வேண்டும்
(3) இணையத்தளத்தின் வழி பதிவு செய்துகொள்ள வேண்டும் ( )
(4) காலை பத்து மணிக்குச் செல்ல வேண்டும்

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது

Q24. கொலை செய்த குற்றத்திற்காகக் குமரன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவனுக்கு இருபது ஆண்டுகள் __________ தண்டனை வழங்கப்படும். ( )

Q25. முதலைகளின் __________ கைப்பைகள் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே தான் முதலைகள் பெருமளவில் கொல்லப்படுகின்றன. ( )

Q26. திரு ரவி தன் வீட்டுக்கதவைப் பூட்ட மறந்துவிட்டார். அதனால் முகமூடி அணிந்த சிலர் அவர் வீட்டிற்குள் நுழைந்து விலையுயர்ந்த பொருட்களை __________ அடித்து விட்டுச் சென்றனர். ( )

Q27. வெகுதூரம் நடந்ததால் மாலாவுக்குத் தாகம் ஏற்பட்டது. தன் தாகத்தைத் தணிக்க அவள் __________ அருந்தினாள். ( )

Q28. என் அத்தை __________ நம்பிக்கை அதிகம் உள்ளவர். அதனால் தான் அவர் அன்றாடம் தவறாமல் கோயிலுக்குச் சென்று வருவார். ( )

| | |
|---|---|
| (1) தோல் | (2) இரை |
| (3) கொல்லை | (4) பானம் |
| (5) சிரை | (6) தோள் |
| (7) இறை | (8) கொள்ளை |
| (9) பாணம் | (10) சிறை |

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

***பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன.அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)***

பலரால் போற்றப்படும் கவிஞர்களில் பாரதிதாசனும் ஒருவராவார். இவரின் இயற்பெயர் சுப்புரெத்தினம் ஆகும். இவர் இளமையிலேயே சுறுசுறுப்பு மிக்கவராகவும் இசையின் பால் (Q29) ____________________ மிக்கவராகவும் திகழ்ந்தார். இளவயதில் இவர் பிரெஞ்சுப் பள்ளியில் தன் கல்வி (Q30)________________ தொடங்கினார். அதன் பின்னர் தான் அவர் தமிழ்க் கல்வி பயின்றார். 1908 ஆம் ஆண்டில் அவருக்கு ஒரு தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராக (Q31)__________ வாய்ப்புக் கிட்டியது. ஆசிரியர் பணிக்கிடையே சிறுசிறு பாடல்களை இயற்றினார். இவரின் பாட்டுணர்வைக் கண்ட பாரதியாருக்கு இவர்மீது (Q32)_____________ தொடர்பும் ஏற்பட்டது. இவரும் பாரதியார் மேல் கொண்ட அன்பாலும் பற்றாலும் தம்மை 'பாரதிதாசன்' என்றே கூறிக்கொள்ள (Q33)_________. இவர் தமிழ் மக்களிடையே நிலவும் சாதிக் கொடுமைகள், மூடப் பழக்கங்கள் , ஏற்றத்தாழ்வுகள், சமய (Q34) ______________________ ஆகியன ஒழிய வேண்டுமென நினைத்தவர். இவரின் படைப்புகள் தமிழ் மக்களிடையே (Q35) ______________________ பகுத்தறிவையும் ஏற்படுத்தின. இவ்வாறு தமிழினத்துக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றிய இவர் தம்முடைய 70 ஆவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

Q29.( )
Q30 ( )
Q31 ( )
Q32 ( )
Q33 ( )
Q34 ( )
Q35 ( )

| | | |
|---|---|---|
| (1) விழிப்புணர்வையும் | (2) நாட்டம் | (3) வேறுபாடுகள் |
| (4) பணியாற்ற | (5) பற்றும் | (6) பயணத்தை |
| (7) எதிர்ப்பையும் | (8) நல்லிணக்கம் | (9) இணங்கினார் |
| (10) விழைந்தார் | (11) கற்பிக்க | (12) பொறுப்பும் |

D8 சுயவிடைக் கருத்தறிதல்

D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றி படி

ஏழை செம்படவன் ஒருவன் கடற்கரையில் அவனது கட்டுமரத்தின் (raft) மேல் படுத்து,பானம் பருகிக்கொண்டும் பாட்டுப் பாடிக்கொண்டும் கவலையின்றி உல்லாசமாய் தம் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தான்.அவ்வேளையில் வரதன் என்ற ஓர் இளைஞன் அங்கு வந்தான்.அவன் துடிப்பு மிகுந்தவன்.வாழ்க்கையில் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்னும் கொள்கை கொண்டவன்.அவன் ஏழை செம்படவனைக் கவனித்தான். அவன் ஒன்றும் கூறாமல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். மறுநாள் மீண்டும் வரதன் கடற்கரைக்குச் சென்றான்.அப்போதும் மீனவனை அதே நிலையில் பார்த்தான்.

*வரதனால் இதைச் சகித்துக்கொள்ள இயலவில்லை.* அவன் மீனவனிடம் சென்று “ ஐயா! இப்படி வேலை செய்ய வேண்டிய காலத்தில் சோம்பலுடன் படுத்துப் பொழுதை வீணாக்குகிறீர்களே!இப்படிப் படுத்துக் கிடக்கும் நேரத்தில் கடலுக்குச் சென்று மீன் பிடித்து அதை விற்றால் பணமாவது கிடைக்குமே!”என்றான்.அதற்குச் செம்படவன், “ காசு கிடைத்தால்? ” என்று கேட்டான் வரதன்.“ காசு கிடைத்தால் நீங்கள் இந்தக் கட்டுமரத்தை விற்று ஒரு படகு வாங்கலாம்.அதை எடுத்துக்கொண்டு கடலுக்குப் போனால் இன்னும் நிறைய மீன்களைப் பிடித்து வரலாம்.ஒவ்வொரு நாளும் அதிகமான பணம் சம்பாதிக்கலாம் ” என்று சொன்னான்.

அதற்குச் செம்படவன் “ அதிகம் சம்பாதித்தால்? ” என்று மீண்டும் கேள்வி எழுப்பினான். வரதன் பொறுமையாக “ ஐயா! நீங்கள் உங்களுக்கென நல்லதொரு வீடு கட்டிக்கொள்ளலாம். சிறிது சிறிதாக பொருள் சேர்த்து மீன்பிடி கப்பல் ஒன்றை வாங்கலாம்.ஆழ்கடலுக்குச் சென்று பல்வகை மீன்களைப் பிடித்து வரலாம்.உள்நாட்டுச் சந்தை தவிர வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் நீங்கள் அவற்றை ஏற்றுமதி செய்யலாம் ” என்று சொன்னான். செம்படவன், “ஏற்றுமதி செய்தால்? ” என்று திருப்பிக் கேட்டான்.வரதனுக்குச் செம்படவனின் அறியாமை குறித்து அதிருப்தி ஏற்பட்டாலும், பொறுமையைக் கடைப்பிடித்துக்கொண்டு,“ ஏற்றுமதி செய்தால் நாட்டிலேயே பெரிய மீன் தொழிலதிபராகத் திகழலாம். மேலும் நீங்கள் பெரிய மாளிகை போன்ற வீட்டைக் கட்டிக்கொள்ளலாம்.பெரிய வாகனம் ஒன்றையும் வாங்கலாம்.அது மட்டும் இன்றி மீன்பிடிக் கப்பல்கள் வாங்கி மீன் பிடிக்க அனுப்பலாம். அதோடு பேரும் புகழும் கிடைக்கும் ” என்று கூறி முடித்தான்.

செம்படவன் மறுபடியும் "இதெல்லாம் கிடைத்தால் ?" என்று வினவினான். வரதன் "அதற்குப் பிறகு நீங்கள் வேலையே செய்ய வேண்டியதில்லை. மகிழ்ச்சியாக நாளெல்லாம் நீலக் கடல் சார்ந்த கடற்கரை மணலில் படுத்து பானம் அருந்திக்கொண்டே பாட்டுப் பாடிக்கொண்டே வழ்க்கையை நிம்மதியாகக் கழிக்கலாம்" என்றான். "நான் இப்பொழுது அதைத்தானே செய்துகொண்டு இருக்கிறேன்" என்றான் செம்படவன். அதைக் கேட்டதும் ஒரு கணம் அதிர்ச்சியில் கற்சிலையைப் போல் நின்றான் வரதன்.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. வரதன் எத்தகைய இயல்புகளைக் கொண்டவன்? (3 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

37. வரதனால் இதைச் சகித்துக் கொள்ள இயலவில்லை என்ற வாக்கியத்தின் மூலம் நாம் வரதனைப் பற்றி என்ன அறிந்து கொள்ளலாம்? (3 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

38. செம்படவனுக்கு எப்போது அதிக வருமானம் கிடைக்கும் என்று வரதன் கூறினான்? (4 மதிப்பெண்கள்)

39. செம்படவன் எப்படி தம் வியாபாரத்திப் பெருக்கிக் கொள்ளலாம்?
(4 மதிப்பெண்கள்)

40. செம்படவன் பெரிய மீன் தொழிலதிபராகத் திகழ்ந்தால் எத்தகைய வசதிகளுடன் வாழலாம்? (2 மதிப்பெண்கள்)

41. செம்படவன் நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்கிறான் என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? ( 4 மதிப்பெண்கள்)

# P5 SA2
# TESTPAPER 13

Primary - 5

வழிப்போக்கன் ஒருவன்............

1. 2 2. 3 3. 3 4. 3 5. 1 6. 2

7. 2 8. 3 9. 2 10. 3 11. 1 12. 4

13. 3 14. 2 15. 1 16. 2 17. 3

18. 2 19. 1 20. 3

21. 4 22. 2 23. 3

24. 10 25. 1 26. 8 27. 4 28. 7

29. 2 30. 6 31. 4 32. 5 33. 10 34. 3 35. 1

36. வரதன் துடிப்பு மிக்கவன். மேலும் வாழ்க்கையில் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவன். இவையே வரதனின் இயல்புகள் ஆகும்.

37. வரதனுக்கு வேலை செய்ய வேண்டிய சமயத்தில் சோம்பலுடன் படுத்து பொழுதை வீணாக்குவது பிடிக்காது என்பதை நாம் இந்த வாக்கியத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

38. செம்படவன் தன்னுடைய கட்டுமரத்தை விற்று ஒரு படகை வாங்க வேண்டும். அந்த படகை வைத்துக்கொண்டு கடலுக்குச் சென்று இன்னும் நிறைய மீன்களைப் பிடித்து வர வேண்டும். அப்பொழுதுதான் செம்படவனுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்று வரதன் கூறினான்.

39. ஆழ்கடலுக்குச் சென்று பலவகை மீன்களைப் பிடித்து வந்து அந்த மீன்களை உள்நாட்டுச் சந்தை தவிர வெளி நாட்டுச் சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்து தம் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

40. செம்படவன் பெரிய மீன் தொழிலதிபராகத் திகழ்ந்தால், மாளிகை போன்ற வீட்டைக் கட்டிக் கொண்டு, ஒரு வாகனத்தை வாங்கிக் கொண்டு மீன்பிடிக் கப்பல்களை வாங்கி மீன் பிடிக்க அனுப்பி வசதியாக வாழலாம்.

41. செம்படவன் கடல் சார்ந்த கடற்கரை மணலில் படுத்து, பானம் அருந்திக் கொண்டே பாட்டு பாடிக்கொண்டிருந்ததால் அவன் நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்கிறான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.